அரியலூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஆணை பிறப்பிப்பவர் :- திரு.மு.இராமன், எம்.எஸ்சி.,எம்.எட்.,
ப.மு.எண் 00317/அ1/2022, நாள்.21.02.2022.

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வித்துறை – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் (Group IV Service) – அரியலூர் மாவட்டம், செந்துறை, மாவட்டக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.இரா.கண்ணன், என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் –தொடர்பாக.

பார்வை
01.சென்னை–06, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு துணைச்செயலாளரின் கடிதம் எண்.3406/PSD/12/2019, நாள். 15.02.2020.
02.அரசு கடித எண்.21472/பக4(2)/2014, நாள்.03.07.2014.
03.சென்னை–06, பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)செயல்முறைகள்
04.அரியலூர் முதன்மைக்கல்வி அலுவலர் செயல்முறைகள் ந.க.எண் 3876/அ1/2020, நாள் 17.09.2020
05.சம்மந்தப்பட்ட பணியாளர் கருத்துருக்கள்.
06. செந்துறை, மாவட்டக்கல்வி அலுவலரின் கடித ந.க.எண் 186/அ1/2021, நாள் .01.2022.

---

**ஆணை**

அரியலூர் மாவட்டம், செந்துறை, மாவட்டக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.இரா.கண்ணன், என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க கோரி பார்வை (5) மற்றும் (6)–ன் வழி கருத்துருக்கள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (Group IV Service) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை(1)–ல் கண்டுள்ள செயல்முறைகள் மூலம் பள்ளிக்கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை(4)–ன்படி நியமன ஆணை வழங்கப்பட்டது.

..2..

அவ்வாறு மேற்காண் செயல்முறைகளில் தெரிவித்தவாறு, தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 14-ன் கீழ் உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட திரு.இரா.கண்ணன், இளநிலை உதவியாளர், மாவட்டக்கல்வி அலுவலம், செந்துறை என்பாருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்ப்பட்டு இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 21.09.2020முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

01. இளநிலை உதவியாளர் பணியில் தமது மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிக்காண் பருவக்காலத்தினை மேல்அலுவலரின் மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் முடிக்கப்பட வேண்டும்.
02. தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சிப் பெற வேண்டும்.
03. தகுதிகாண் பருவ காலத்திற்குள் இளநிலை உதவியாளர் பவானிசாகர் அடிப்படைப்பயிற்சியினை முடித்து, அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சிப் பெற வேண்டும்.
04. தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது காலமுறை ஊதிய உயர்வு மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

இணைப்பு
பணிப்பதிவேடு- 1 தொகுதி.

24/2/2022

முதன்மைக்கல்வி அலுவலர்,
24/2/22 அரியலூர்.

பெறுநர்
திரு.இரா.கண்ணன்,
இளநிலை உதவியாளர்,
மாவட்டக்கல்வி அலுவலகம்,
செந்துறை
அரியலுரர் மாவட்டம்.
(சம்மந்தப்பட்ட அலுவலரின் வழியாக)

நகல் மாவட்டக்கல்வி அலுவலகம், செந்துறை, அரியலுரர் மாவட்டம்

/ உரியவருக்கு சார்புசெய்யப்படுகிறது /

2/3/22
மாவட்ட கல்வி அலுவலர்
செந்துறை - 621 714.

2/3/22